# வீல்ஸ் இந்தியா லாபம் ரூ.37 கோடியாக உயர்வு: நிர்வாக இயக்குனர் ஸ்ரீவத்ஸ்ராம் தகவல்

**சென்னை, ஜூலை 28–**

**ஜூன் 30ந் தேதியுடன் முடிந்த முதல் கால் ஆண்டிற்கான வீல்ஸ் இந்தியாவின் நிகர லாபம் ரூ. 37 கோடியை எட்டியுள்ளது. இது கடந்த ஆண்டு (2025) ஜூன் 30ந் தேதியுடன் அன்று முடிந்த முதல் கால் ஆண்டில் ரூ.26 கோடியாக இருந்தது. கடந்த ஆண்டின் இதே காலக்கட்டத்தில் இருந்த ரூ.1,187 கோடி வருவாயுடன் ஒப்பிடுகையில், வருவாய் 16.8% அதிகரித்து ரூ.1386 கோடியாக உயர்ந்துள்ளது என்று நிர்வாக இயக்குனர் ஸ்ரீவத்ஸ்ராம் தெரிவித்துள்ளார்.**

முந்தைய ஆண்டின் முதல் காலாண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 324 கோடியுடன் ஒப்பிடுகையில், 2026–27 நிதியாண்டின் முதல் காலாண்டில் நிறுவனத்தன் ஏற்றுமதி 17.3% அதிகரித்து ரூ. 380 கோடியாக உயர்ந்துள்ளது.

செயல்பாடு குறித்து நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஸ்ரீவத்ஸ் ராம் கூறியதாவது:–



"ஜிஎஸ்டி 2.0 சீர்திருத்தங்களுக்குப் பிறகும் தங்களது வளர்ச்சியைத் தக்கவைத்துக் கொண்ட கார்கள், லாரிகள் மற்றும் விவசாய டிராக்டர்களுக்கான உள்நாட்டுச் சந்தையின் வளர்ச்சிக்கு இணையாக எங்கள் நிறுவனத்தின் விற்பனையும் அதிகரித்தது. மேலும், கட்டுமானப் பணிகளுக்கான இயந்திரங்களின் சக்கரங்கள் ஏற்றுமதியிலும் வலுவான வளர்ச்சியைக் கண்டுள்ளோம்.

அதேவேளையில், மேற்கு ஆசியாவில் நிலவும் நெருக்கடி காரணமாக மூலப்பொருட்களின் விலையில் கடுமையான பணவீக்க அழுத்தம் காணப்பட்டது.

எதிர்கால எதிர்பார்ப்புகள் குறித்துப் பேசிய ஸ்ரீவத்ஸ், "2வது காலாண்டிலும் இந்த வளர்ச்சி வேகம் தொடரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்''.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிறுவனம் லாரிகள், விவசாய டிராக்டர்கள், பயணிகள் வாகனங்கள் மற்றும் கட்டுமான உபகரணங்களுக்கான சக்கரங்கள்; லாரிகள் மற்றும் பேருந்துகளுக்கான ஏர் சஸ்பென்ஷன் அமைப்புகள்; மற்றும் கட்டுமானம் மற்றும் காற்றாலைத் தொழில்களுக்கான உதிரிபாகங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் முன்னணியில் உள்ளது. இந்நிறுவனம் தமிழ்நாடு, மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், உத்தரகண்ட் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தனது உற்பத்தி ஆலைகளைக் கொண்டுள்ளது.

# பரோடா வங்கி சிறப்பான செயல்பாடு, டெபாசிட், வழங்கிய கடன் உயர்வு; லாபம் ரூ.1278 கோடியாக அதிகரிப்பு

## நிர்வாக இயக்குனர் தேப் தத்தா தகவல்

**சென்னை, ஜூலை 28–**

**பொதுத்துறை பரோடா வங்கி நடப்பு ஆண்டு கடந்த ஜூன் மாதத்துடன் முடிவடைந்த காலாண்டில் ரூ.1278 கோடி லாபம் சம்பாதித்துள்ளது. இதன் டெபாசிட், வழங்கிய கடன் உயர்ந்துள்ளது என்று வங்கியின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி தேப் தத்தா தெரிவித்தார்.**

வங்கி உலகளாவிய வணிகம் ரூ.30 லட்சத்து 50 ஆயிரத்து 457 கோடியாக உள்ளது. இது 15.4% வளர்ச்சியாகும்.

வங்கியின் குளோபல் அட்வான்ஸ் ஆண்டுக்கு 17.4% வளர்ச்சியைப் பதிவு செய்தன மற்றும் உள்நாட்டு கடன் 16.1% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

ஜூன் 30ந் தேதி நிலவரப்படி வங்கியின் ரீடெய்ல் அட்வான்ஸ் ஆண்டுக்கு 18.4% அதிகரித்துள்ளது.

வாகனக் கடன் (25.3%), அடமானக் கடன் (27.4%), வீட்டுக் கடன் (14.7%) மற்றும் கல்விக் கடன் (10.8%) போன்றவை வளர்ச்சி பெற்றுள்ளன. மற்றும் சில்லறை, விவசாய கடன்கள் மற்றும் சிறு, குறு, நடுத்தர தொழில் கடன்களின் பங்கு ஜூன் மாத நிலவரப்படி 62.9% ஆக உள்ளது.

உலகளாவிய வைப்புத்தொகை ஆண்டுக்கு 13.8% வளர்ச்சியைப் பதிவுசெய்தது மற்றும் உள்நாட்டு



வைப்புத்தொகைகள் 14.7% அதிகரித்துள்ளது.

உள்நாட்டு சேமிப்பு கணக்கு வைப்புத்தொகை 10% வளர்ச்சியைப் பதிவு செய்து 5,21,149 கோடி ரூபாயாக உள்ளது. காலாண்டிற்கான நிகர வட்டி வருமானம் ஆண்டு அடிப்படையில் 9.5% அதிகரித்துள்ளது என்றார் அவர்.

# நாளை ஐஸ்வர்யா ஜாதகாலயாவின் 81வது "ஸ்ரீ சத்திய நாராயணா பூஜை"

## வேத சாஸ்திர ஜோதிடர் கே.எஸ். ரவீந்திரன் தகவல்

**சென்னை, ஜூலை 28–**

**ஸ்ரீ விஷ்ணு பெருமாள் அவதரித்த பல அவதாரங்களில் ஒன்று சத்தியநாராயணர் அவதாரம். பௌர்ணமியை முன்னிட்டு ஐஸ்வர்யா ஜாதகாலயாவில் நாளை (29ந் தேதி) சத்தியநாராயணா பூஜை மாலை 4.30 மணி முதல் நடைபெறும்.**

நுழைவுக் கட்டணம், பிரசாதக் கட்டணம் எதுவும் இல்லை. பூஜையில் கலந்து கொள்ளும் பக்தர்கள் சங்கல்பம் செய்ய வேண்டும். புனிதமான சத்தியநாராயண கதையைக் கேட்பது இப்பூஜையின் மிக முக்கியமான பகுதியாகும். பூஜையின் போது இறைவனுக்கு அளிக்கப்படும் பிரசாதத்தை பக்தர்கள் எடுத்துக் கொள்வது மிக நல்லதொரு புண்ணியமாக கருதப்படுகிறது.

ஸ்ரீ சத்யநாராயண பூஜையில் பங்கேற்பதன் பலன் பற்றி வேத சாஸ்திர ஜோதிடர் கே.எஸ். ரவீந்திரன் கூறியதாவது: –

''பெரும்பாலான துன்பங்களுக்கு முடிவு உண்டாகும். எப்போதும் உண்மையாக இருப்பவர்கள் மீது பெருமாள் ஆசிகளைப் பொழிவார். பிரசாதம் சாப்பிடுவது மண அமைதி பெற உதவும். இது இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஒரு வடிவம். முந்தைய பிறவிகளின் கெட்ட கர்மாக்கள் நிவர்த்தி செய்ய வாய்ப்பு கிடைக்கும். கடந்த காலத்தில் புரிந்த கெட்ட செயல்களின் மோசமான விளைவுகளை நீக்க மனிதர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். ஒருவரின் வாழ்க்கையின் இலக்குகளை அடைய உதவுகிறது.

உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தவும். பொய்களை விலக்கவும் உதவிடும் உண்மைக்கு ஆதரவான மனப்பான்மையை உருவாக்கவும் உதவிடும். சிக்கல்களைத் தீர்க்கவும், சிரமங்களைச் சமாளிக்கவும் உதவுகிறது. அன்றைய தினம் விரதம் இருந்தால் அது மிகவும் சிறப்பாகும்''.

இவ்வாறு அவர் கூறினார்.

மேலும் நீங்கள் தீர்க்க விரும்பும் பிரச்சனைகளை யாவும் பகவான் ஸ்ரீ சத்தியநாராயணரிடம் பிரார்த்தனை யாக வைக்கப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்.

இந்த பூஜை மேற்கு மாம்பலம், எண்.55, கவரை தெரு (ஏ.எம். ஆர் கல்யாண மண்டபம் அருகில்) நடைபெறும்.

நேரில் வர இயலாதவர்கள் நமது "AISHWARYA JATHAKALAYA" யூடியூப் சேனலில் நேரலையிலும் காணலாம். www.youtube.com/@aishwaryajathakalaya. மேலும் இது பற்றி அறிய 98841 41870 / 98841 47630 / 9444686670 எண்ணில் தொடர்பு கொள்ளலாம். வாட்ஸ்ஆப்பிலும் தகவல் அனுப்பலாம்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்: வேலூர் கலெக்டர் லீலா அலெக்ஸ் வழங்கினார்

வேலூர், ஜூலை 28–

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் கலெக்டர் பி.எஸ். லீலா அலெக்ஸ் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வ 692 பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள்மீது உரிய விசாரணை மேற்கொண்டு தகுதியானதாக இருப்பின் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் கலெக்டர் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் இயக்கத்திறன் குறைபாடுடைய 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.15,750 மதிப்பில் சக்கர நாற்காலி, 2 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.950 வீதம் ரூ.1,900 மதிப்பிலான ஊன்றுகோல்கள், 5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,79,700 மதிப்பில் செயற்கை கால்கள் என மொத்தம் 8 மாற்றுத்திறனாளிகளுக்கு



ரூ.1,97,350 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.து.சுரேஷ், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) சி.மாறன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர் ராஜராஜன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் சரவணன், உதவி ஆணையர் (கலால்) குணசேகரன், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் பாபு உட்பட பலர் கலந்து கொண்டனர்.


## அமர்ஜோதி ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 157, குமரன் ரோடு, திருப்பூர் 641 601.
E-mail: mill@amarjothi.net | Website: www.amarjothi.net
CIN : L17111TZ1987PLC002090 | Phone: 0421 4311600

**ஜூன் 30, 2026ல் முடிவடைந்த காலாண்டிற்கான தனியான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் அறிக்கை**

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | 30.06.2026 (தணிக்கை செய்யாதது) | 31.03.2026 (தணிக்கை செய்தது) | 30.06.2025 (தணிக்கை செய்யாதது) | 31.03.2026 (தணிக்கை செய்தது) |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 5324.55 | 8841.03 | 4897.36 | 20758.52 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 373.95 | 665.72 | 319.43 | 1486.07 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 373.95 | 665.72 | 319.43 | 1486.07 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 308.61 | 549.41 | 254.58 | 936.97 |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 308.61 | 549.41 | 254.58 | 936.97 |
| 6 | சமபங்கு மூலதனம் | 675.00 | 675.00 | 675.00 | 675.00 |
| 7 | கடந்த ஆண்டு தணிக்கையான இருப்புநிலை அறிக்கையில் உள்ளபடி இதர சமம் | - | - | - | 19038.03 |
| 8 | பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/–) (தொடர் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | |
| | ஏ. அடிப்படை | 4.57 | 8.14 | 3.77 | 13.88 |
| | பி. டைலூட்டட் | 4.57 | 8.14 | 3.77 | 13.88 |

**ஜூன் 30, 2026ல் முடிவடைந்த காலாண்டிற்கான ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் அறிக்கை**

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | 30.06.2026 (தணிக்கை செய்யாதது) | 31.03.2026 (தணிக்கை செய்தது) | 30.06.2025 (தணிக்கை செய்யாதது) | 31.03.2026 (தணிக்கை செய்தது) |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 7571.32 | 9482.75 | 5270.08 | 22369.14 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 391.08 | 672.18 | 325.95 | 1506.79 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 391.08 | 672.18 | 325.95 | 1506.79 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 322.75 | 554.74 | 259.77 | 952.34 |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 322.75 | 554.74 | 259.77 | 952.34 |
| 6 | சமபங்கு மூலதனம் | 675.00 | 675.00 | 675.00 | 675.00 |
| 7 | கடந்த ஆண்டு தணிக்கையான இருப்புநிலை அறிக்கையில் உள்ளபடி இதர சமம் | - | - | - | 19292.88 |
| 8 | பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/–) (தொடர் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | |
| | ஏ. அடிப்படை | 4.78 | 8.22 | 3.85 | 14.11 |
| | பி. டைலூட்டட் | 4.78 | 8.22 | 3.85 | 14.11 |

குறிப்பு:

1. ஜூன் 30, 2026ல் முடிந்த காலாண்டுக்கான மேற்கூறிய தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள், திருத்தப்பட்ட நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள் 2016ன் கீழ் அறிவிக்கப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலைகளின்படி (Ind AS) உள்ளன. மேற்கண்ட முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, ஜூலை 27, 2026 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழுவின் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு, நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.
2. இந்த நிதி முடிவுகள், நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 133ன் கீழ் அறிவிக்கப்பட்ட பொருந்தக்கூடிய இந்திய கணக்கியல் தரநிலைகள் ('Ind AS') மற்றும் நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள், 2015ன்படி (திருத்தப்பட்டபடி) தயாரிக்கப்பட்டுள்ளன.
3. மேலே உள்ளவை SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள், 2015ன் விதிமுறை 33ன் கீழ் பங்குச் சந்தையில் தாக்கல் செய்யப்பட்ட 30.06.2026–ல் முடிந்த காலாண்டுக்கான நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாகும். காலாண்டுக்கான நிதி முடிவுகளின் முழு வடிவம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் பிஎஸ்இ லிமிடெட்டின் இணையதளத்திலும் (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளமான https://tinyurl.com/Amarjothi-Financials-30062026-லும் கிடைக்கிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் இதை பார்க்கலாம்.
4. கம்பெனியின் செயல்பாடுகள் ஒரு பகுதியாக நூல் உற்பத்தியில் மட்டுமே ஈடுபடுகிறது.
5. ஒருங்கிணைந்த நிதி முடிவுகள் நிறுவனத்தின் முழு துணை நிறுவனமான ஆர்பிஜெ டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்டின் நிதிநிலை முடிவுகளையும் உள்ளடக்கி உள்ளது.
6. முந்தைய காலத்திற்கான புள்ளிவிவரங்கள் தேவைப்படும் இடங்களில் மீண்டும் தொகுக்கப்பட்டுள்ளன/ மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

இடம்: திருப்பூர்
தேதி: 27.07.2026

அமர்ஜோதி ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
R. ஜெய்சந்தர்
முழு நேர இயக்குனர்
DIN:00390836



### Enrollment notice

After 10 days of the publication of this notice and within three months there after. I, PARKAVI.E, D/o. ELUMALAI.P, aged 24 years, permanently residing at No.329, Chinnapurangani street, Kadampuliyur, Panruti Post, Panruti Taluk, Cuddalore District, Tamil Nadu- 607103. Intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamilnadu and Puducherry , Bar Council building, High court campus, Chennai - 600 104.
Those who have any valid objections may, notify the same to the bar council with in ten days.

**E.PARKAVI**



**IN THE COURT JUDICIAL MAGISTRATE AT AMBATTUR**
**M.C. No. 39 of 2023**

K. Bhuvaneswari, D/O C. Kannan ...Petitioner
Versus
V. Harikrishnan, S/O N. Vaasu .... Respondent

To. Respondent
V. Harikrishnan
Son Of N. Vaasu

Whereas The Above Petitioenr Has Instituted Above Maintanance Case In Mc No. 39 Of 2023 As Filed By K. Bhuvaneswari.

You Are Hereby Summoned To Appear Before The Hon'ble Court Either In Person Or By Duly Authorised Agent, Representative, Legal Practitioner Or Officer Authorised By You To Present Your Case Before The Court On **14.08.2026.** And To Show Cause As To Why The Relief Prayed For Should Not Be Granted.

In Default Of Your Appearance On **14.08.2026** The Petitiion Will Be Heard And Determined In Your Absence.

**S. LOKESH**
Counsel for Petitioner



*மாண்பமை கூடுதல் மாவட்ட நீதிமன்றம் எண்: II*
*தூத்துக்குடி*
*A.S.No. 60/2025*

1.சுடலி
2.சண்முகம்
3.நம்பி
...மேல்முறையீட்டாளர்கள்
–எதிர்–
1. திருமலைநம்பி, த/பெ.பரமசிவன், 450/241, பெருமாள் கோவில் தெரு, குளசேகரபட்டிணம், திருசெந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.
2. மூக்கம்மாள், க/பெ.பெருமாள், மேலமாடத்தெரு, திருசெந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.
3. லெட்சுமி அம்மாள், க/பெ.வேல்கோனார், 41/101, சோலையப்பன் தெரு, பழைய வண்ணார பேட்டை, சென்னை–21
...1ம், 2ம் மற்றும் 7ம் எதிர்மேல்முறையீட்டாளர்கள்

அறிவிப்பு

மேல்முறையீட்டாளர்கள் பக்கம் தூத்துக்குடி கூடுதல் மாவட்ட நீதிமன்றம் எண்:II–ல் O.S.No.31/2017–ல் அசல் வழக்கின் உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்த மேல்முறையீடு A.S.No.60/2025–ல் தாங்கள் வாய்தா தேதியான **18.08.2026** அன்று நேரில் ஆஜராகுவதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10 மணிக்கு சமூகம் நீதிமன்றம் முன்பு நேரிலோ அல்லது தங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்கள் ஆட்சபேனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் தங்கள் மீது ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

N.மகேஷ் சரவணன், B.A.,LL.B.,(Hons),
வழக்கறிஞர்
தூத்துக்குடி



### CHANGE OF NAME

I, KRIPAA SHANKAR A A S/o SUBRAMANIAM ARUNACHALAM R/o Block G, 103, The Central Park South, Elcot Avenue Main Street, Sholinganallur, Kancheepuram, Tamil Nadu-600119, have changed the name of my minor son SHASMITH ARUNACHALAM aged 17 years and he shall hereafter be known as SHASMITH ARUN.



### ENROLLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within THREE months thereafter, I, Vivek Sam Daniel J, S/o. Joseph Rathna Kumar, aged 32 years, permanently residing at No.162, Chennai High Road, Kallakurichi - 606202. intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry Bar Council Buildings, High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within ten days.

**Vivek Sam Daniel J**



### பொது அறிவிப்பு
### அசல் சொத்து ஆவணம் காணாமல் போனது

இதன் மூலம் பொதுமக்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்படுவது என்னவெனில், எனது கட்சிக்காரரான **திருமதி. தங்கேஸ்வரி** (வயது: 42), திரு. அய்யாதுரை அவர்களின் மகள், ஆதார் எண்: 4620 1173 4521, தற்போது எண். 65, எம். சி. சுந்தர வரதன் நகர், மாதவரம், சென்னை–600060 என்ற முகவரியில் வசித்து வருகிறார். இவருக்குச் சொந்தமான கீழே விவரிக்கப்பட்டுள்ள காலி மனை தொடர்பான அசல் தாய் பத்திரம் (Mother Document) 15.07.2026 அன்று மாலை 4.45 மணியளவில், சென்னை MMBT பேருந்து நிறுத்தம் அருகே அவரது கைப்பையிலிருந்து தவறுதலாக விழுந்து காணாமல் போயுள்ளது. பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டபோதிலும், அந்த அசல் ஆவணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

**சொத்து விவரங்கள்: மாவட்டம்: திருவள்ளூர் வட்டம்: பொன்னேரி, சார்பதிவாளர் அலுவலகம்** (SRO): **பொன்னேரி, கிராமம்: ஓரக்காடு (கிருத்தலாபுரம் கிராமம்), சொத்து வகை: காலி மனை, சர்வே எண்: 78/5, பரப்பளவு: 1,845 சதுர அடி, அமைவிடம்: மெக்கா நகர், ஆவண எண்: 427/1996, ஆவண தேதி: 31.12.1996**

மேற்கண்ட அசல் சொத்து ஆவணத்தை யாரேனும் கண்டெடுத்திருந்தாலோ அல்லது தங்கள் வசம் வைத்திருந்தாலோ, தயவுசெய்து கீழ்க்கண்ட முகவரி அல்லது தொடர்பு எண்ணில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **தொடர்பு எண்: 9488446022.**

**ஆலம்ஷா, வழக்கறிஞர்**
**உயர்நீதிமன்றம், சென்னை.**



*தேவகோட்டை டி.மு கோர்ட்டு*
*O.S.No. 27/2012*

சாதன், புல்பானி, ஒடிசா, அதன் செயலாளர் பால்ராஜ் மூலம்.
...வாதி
–எதிர்–
தயாளவதி, W/o.நல்லையா, 38.சின்னத்தம்பி தெரு, கோசாபெட், ஓட்டேரி, சென்னை–600012.
...61–ம் பிரதிவாதி

அறிவிப்பு

ஷை வழக்கின் சம்மனை வாதி தரப்பில் பலமுறை ஷை 61–ம் பிரதிவாதிக்கு சம்மன் அனுப்பியும் பெற்றுக் கொள்ளவில்லை. அதனால் ஷை பிரதிவாதிக்கு சம்மன் சார்பாகவில்லை. அதனால் ஷை 61–ம் பிரதிவாதி சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக **05.08.2026–ம்** தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று காலை 10.30 மணியளவில் ஷை 61–ம் பிரதிவாதி நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறினால் ஷை 61–ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மாணிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

B.ஆசைத்தம்பி, B.Com.,B.L.,
அட்வகேட்,
காரைக்குடி



## ஐபி ரிங்ஸ் லிமிடெட்

(அமால்கமேஷன்ஸ் குழுமத்தின் ஓர் அங்கம்)
CIN: L28920TN1991PLC020232
பதிவு அலுவலகம்: D-11/12, தொழிற்பேட்டை, மறைமலை நகர் – 603 209.

**காணொளி / பிற ஒலி, ஒளி தகவல் தொடர்பு சாதனங்கள் மூலமாக நடைபெறும் 35ஆம் ஆண்டு பொதுக்குழுக்கூட்டம் மற்றும் மின்னணு வாக்கு பதிவிற்கான அறிவிப்பு**

அன்புள்ள உறுப்பினர்களே,

1. நிறுவனத்தின் **35ஆம் ஆண்டு பொதுக்குழுக்கூட்டம்** (35th AGM) **திங்கட்கிழமை 24 ஆகஸ்ட் 2026 காலை 11.30** மணிக்கு வருடாந்திர பொதுக்கூட்டம் கூட்டுவதற்காக விநியோகிக்கப்படும் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக காணொளி ("VC"), அல்லது பிற ஒலி, ஒளி தகவல் தொடர்பு சாதனங்கள் ("OAVM") வழியாக நடத்தப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
2. கார்ப்பொரேட் விவகாரங்கள் துறை அமைச்சகமும் (MCA) இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியமும் (SEBI) வெளியிடப்பட்ட பிற பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் அடிப்படையில் அக்டோபர் 03, 2024 தேதியிட்ட SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2024/133 மூலம் கடைசியாக செப்டம்பர் 22, 2025 தேதியிட்ட 03/2025ல் வெளியிடப்பட்டதற்கிணங்க (இனிமேல் கூட்டாக "சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகிறது), நிறுவனத்தின் AGM ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் இல்லாமல் VC/OAVM மூலம் நடத்தப்படும்.
3. 2025–26ஆம் ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கையுடன் 35ஆம் பொதுக்குழுவை கூட்டுவதற்கான அறிவிப்பு பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க **ஜூலை 27, 2026** அன்று உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த 35ஆம் ஆண்டுக்கான தனியான மற்றும் ஒருங்கிணைந்த முழு விவரங்கள் (இருப்புநிலை அறிக்கை, லாப நஷ்டம் குறித்த விவரங்கள் உள்ளிட்ட கணக்குத் தணிக்கை விவரங்கள், தனிப்பட்ட நிதி விவரங்கள், வரவு செலவு கணக்கு விவரங்கள், ஆடிட்டர்கள் மற்றும் இயக்குனர்களின் அறிக்கைகள் போன்றவை) நிறுவனத்தின் இணையதளமான **www.iprings.com**இல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆவணங்களை ஆய்வு செய்ய விரும்பும் உறுப்பினர்கள் தங்கள் பெயர், Folio No./ Client ID and DP ID, PAN Cardன் சுய சான்றளிக்கப்பட்ட நகலுடன் அவர்கள் ஆய்வு செய்ய விரும்பும் ஆவணங்களை குறிப்பிட்டு **cs@iprings.com** மற்றும் **investor@iprings.com** என்ற மின்னஞ்சல் மூலமாக விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
4. கம்பெனிகளின் சட்டம் 2013 பிரிவு 108, விதி 20 மற்றும் கம்பெனியின் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) சட்டங்கள் 2015 மற்றும் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் SEBI (LODR) விதிமுறைகள் 2015, 44க்கு கீழ் வரும் (அவ்வப்போதைய திருத்தங்களுக்கு ஏற்ப) e-voting எனப்படும் மின் வாக்கு பதிவு வசதியை இந்நிறுவனம் வழங்கியுள்ளது. 35வது ஆண்டு பொதுக்குழுக்கூட்டம் தொடர்பாக அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அனைத்து வர்த்தக விவரங்களையும் National Securities Depository Limited (NSDL) மூலமாக பரிவர்த்தனை செய்து கொள்ளவும், மின் வாக்குப் பதிவு மூலம் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யும் வசதியையும் இந்நிறுவனம் வழங்கியுள்ளது.
5. தொலைதூர மின்வாக்களிப்பு **ஆகஸ்ட் 21, 2026 வெள்ளிக்கிழமை ( காலை 09:00, மணி)** தொடங்கி **ஆகஸ்ட், 23, 2026 ஞாயிறு (மாலை 05:00 மணி)** முடிவடையும். குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பிறகு தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு செய்ய அனுமதி இல்லை.
6. இந்த வருடாந்திர அறிக்கை **ஜூலை 24, 2026** (**வெள்ளிக்கிழமை**) அன்று உறுப்பினர்களின் பதிவேட்டில் அல்லது வைப்புத்தொகையாளர்களால் பராமரிக்கப்படும் பயன்பெறும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பதிவு தேதிக்கு (**cut-off date**) **ஜூலை 24, 2026** பிறகு, மற்றும் **ஆகஸ்ட் 17, 2026**க்கு முன்னதாக நிறுவனத்தின் உறுப்பினர்களாக பதிவு செய்த நபர்கள், பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் Cameo Corporate Services Limitedக்கு **investor@cameoindia.com** அல்லது **cs@iprings.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கையை அனுப்புவதன் மூலம் Login – Password ஐ பெறலாம்.
7. முன்னரே வாக்களிக்காத உறுப்பினர்கள் மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் வாக்களிப்பதற்கான வசதி, தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு (e-voting) மூலம் கூட்டநேரத்தில் ஏற்படுத்தப்படும். ரிமோட் மின் வாக்களிப்பு மூலம் கூட்டத்திற்கு முன்னதாக வாக்களித்த உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால் மீண்டும் வாக்களிக்க இயலாது. இந்த தொலைதூர மின்வாக்களிப்பு செயல்முறைகளை ஆய்வு செய்பவராக நிறுவன செயலராக **திரு. M. பிரான்ஸிஸ்,** (**ICSI membership no. FCS 10705**) அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.
8. உறுப்பினர்கள் VC/OAVM மூலமாக கலந்துகொள்ள, https://www.evoting.nsdl.com எனும் இணையதளத்தில் தங்கள் மின் வாக்கு login விவரங்களைப் பதிவு செய்து **EVEN No. 140367** என்று தேர்வு செய்து NSDL வழங்கும் 35ஆம் ஆண்டுக்கான இந்தப் பொதுக்குழுக்கூட்ட நிகழ்வுகளை நேரடியாகக் காணலாம். VC/OAVM மூலமாக நடைபெறவிருக்கும் இந்தப் பொதுக்குழுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு, நிகழ்வு நடைபெறுவதற்கு 30 நிமிடம் முன்னதாக, அதாவது **ஆகஸ்ட் 24, 2026** அன்று (**திங்கட்கிழமை**) **காலை 11:00 மணிக்கு** முன்னதாக உள்நுழைவதற்கான வசதி திறந்துவைக்கப்படும். நிகழ்வு துவங்கிய 30 நிமிடங்களுக்குப் பிறகு இந்த வசதி நிறுத்தப்படும். ஆகையால் உறுப்பினர்கள், முன் வருபவர்களுக்கு முன்னுரிமை என்பதை கருத்தில் கொண்டு இந்தப் பொதுக்குழுக்கூட்டத்தில் பங்குபெற வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.
9. **இந்த ஆண்டு அறிக்கை தொடர்பான கேள்விகள் மற்றும் விவரங்கள் அறிவதற்கான வழிமுறைகள்:**

   VC / OAVM மூலமாக ஆண்டுக்கான பொதுக்குழுக்கூட்டம் நடைபெறவிருப்பதால் 31 மார்ச் 2026 தேதி முடிந்த மேற்கூறிய ஆண்டிற்கான கணக்கு மற்றும் தணிக்கை தொடர்பான விவரங்களை அறிய விரும்பும் உறுப்பினர்கள் இந்த பொதுக்குழுக்கூட்டம் நடைபெறுவதற்கு **குறைந்தது 10 (பத்து) நாட்களுக்கு முன்னதாக** தங்கள் பெயர் மற்றும் 16 இலக்க டீமேட் கணக்கு எண் / Folio எண், PAN எண், கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை குறிப்பிட்டு **cs@iprings.com / investor@iprings.com** எனும் மின்னஞ்சல் முகவரிகளுக்கு தங்கள் கோரிக்கைகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
10. நிறுவனத்தின் 35ஆம் ஆண்டிற்கான பொதுக்குழு கூட்டத்தின்போது தங்கள் கருத்துக்களை தெரிவிக்கவோ அல்லது கேள்விகளை கேட்க விரும்பும் உறுப்பினர்கள் **cs@iprings.com & investor@iprings.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு தங்கள் பெயர், DP ID மற்றும் Client ID / Folio எண், PAN எண், கைப்பேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை குறிப்பிட்டு கோரிக்கை வைத்து முன்பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
11. VC/OAVM மூலமாக நடைபெறவிருக்கும் 35ஆம் ஆண்டிற்கான இந்த பொதுக்குழுக்கூட்டம் தொடர்பான மின் வாக்குப்பதிவு முறை குறித்த கேள்விகள் மற்றும் குறைகள் ஏதேனும் இருப்பின் **evoting@nsdl.com**இல் கோரிக்கையை அனுப்பலாம் அல்லது **NSDL** உதவி மையத்தை **022-48867000** என்ற எண்ணைத் தொடர்புகொள்ளலாம்.

   மேலும் விவரங்களுக்கு, மின்வாக்குப்பதிவிற்கான பயன்பாட்டுக் கையேட்டை **www.evoting.nsdl.com** என்ற இணையதளத்திலிருந்து பங்குதாரர்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இயக்குநர்கள் குழுவின் உத்திரவின்படி
**ஐபி ரிங்ஸ் லிமிடெடிற்காக**
**M. சத்தியநாராயணன்**
நிறுவன செயலாளர்

இடம்: சென்னை
நாள்: ஜூலை 28, 2026